பணம் ஒதுக்கப்பட்டது என்ன ஆனது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஞானசேகரன், கேள்வியைக் கேளுங்கள், அமைச்சர் சொல்ல வேண்டிய பதிலை நீங்கள் சொல்லிக் கொண்டிருக்கிறீர்களே, உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலா வருவோரினுடைய எண்ணிக்கையைப் பொறுத்து மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 162, திரு. இரா. பொன்னார்டு, மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

162--

தூண்டில் வளைவு அமைத்தல்

*1105-திரு. இரா. பொன்னார்டு:

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் கடலோரப் பகுதிகளில் தேவைப்படும் இடங்களில் தூண்டில் வளைவு அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) வள்ளம் மற்றும் கட்டுமர மீனவர்களின் கோரிக்கையான தூண்டில் வளைவு என்னும் தடுப்புச்சுவரை கட்டுவது பற்றிய கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு பெங்களூரிலுள்ள மத்திய கடலோர பொறியியல் நிறுவனம் தக்க சாத்தியக்கூறுகள் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ள கோரப்பட்டுள்ளது. அங்கிருந்து பரிசீலிக்கப்பட்டு அறிக்கை வந்தவுடன் கட்டுவது பற்றி தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1996 ஆகஸ்ட் 10]

திரு. இரா. பெர்னார்டு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய பதிலுக்கு நன்றி. குமரி மாவட்டததில் தேங்காய்ப்பட்டினம், இணையந்துறை, குளச்சல், குரும்பனை, மண்டைக் காட்டுபுதூர், கடியபட்டினம், முட்டம், கன்னியாகுமரி ஆகிய பகுதிகளில் சாத்தியமான இடங்களில் தூண்டில் வளைவுகள் ஏத்தனை அமைக்கப்பட இருக்கிறது என்றும், இந்த நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்ற கலைஞர் அரசு முன்வந்திருப்பதற்கு நன்றி தெரிவிப்பதோடு அண்டை மாநிலமான கேரளாவில் இதுபோன்ற திட்டம் வெற்றிபெற்று அங்குள்ள மீனவர்கள் வளர்ச்சி அடைந்திருப்பதோடு மட்டுமல்லாமல் அரசுக்கு அந்நிய செலாவணியும் ஈட்டித் தருகிறார்கள். ஆகவே எவ்வளவு விரைவாகச் செய்து தருவார்கள் என்று மீனவர்கள் சார்பில் அமைச்சரிடம் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றி கூடிய விரைவில் ஆய்வுகள் மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆய்வு அறிக்கை பெறப்பட்டவுடன் கூடிய விரைவில் அது செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. மணி.

திரு. டி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்தத் தூண்டில் வளைவு சம்பந்தமாக குமரி மாவட்டத்திலே கடலிலே நிறைய, பெரிய கொந்தளிப்பு இருக்கின்ற காரணத்தினால் இந்த மாமன்றத்திலே 1978–லும் 1982–லும் இதே கோரிக்கை வைத்தபோது அதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. எனவே நான் கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம் அடுத்த நிதியாண்டில் அந்த மாவட்டத்திலே இருக்கின்ற 5, 6, 7 பகுதிகளில், இந்த பெங்களூரில் இருக்கின்ற இந்த நிறுவனத்தைக்கொண்டு–நாம் செய்ய இயலாது என்று கருதுகிறேன்–அந்தக் கடலோர மக்களுடைய நீண்டகால கோரிக்கை என்பதால் இந்தக் கோரிக்கையை அமல் நடத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் மானியக் கோரிக்கையில் இதற்குள்ள பதிலை விரிவாகக் கூறுவேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[*1996 ஆகஸ்ட் 10*

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

வினா எண் *163*, திரு. ஜி. நிஜாமுதீன், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

163--

மீன் பிடித் துறைமுகம் கட்டுதல்

1784*--திரு. ஜி. நிஜாமுதீன்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) நாகப்பட்டினத்தில் மீன்பிடித் துறைமுகம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நாகப்பட்டினத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பது குறித்து பெங்களூர், மத்திய கடலோர பொறியியல் நிறுவனம் ஏப்ரல் மாதம் நாகப்பட்டினத்திற்கு வருகை தந்து, துறை அதிகாரிகளுடன் கூட்டாய்வு செய்தனர். அதன் பிறகு மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கு உரிய இடம் தேர்வு செய்ய அங்கு 'மாதிரி ஆய்வுகள்' மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாதிரி ஆய்வுகள் நடத்திய பிறகு நாகப்பட்டினத்தில் மீன்பிடித் துறைமுகம் கட்டுவது குறித்து பரிசீலித்து மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. வ. அப்துல் நாசர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு, இதற்கு கால நிர்ணயம் செய்து முடிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மதிப்பீடு பற்றி ஆய்வு செய்த பின்பு அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.